# 11

# இரட்சிப்பைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

இந்தத் தொடர் கட்டுரையில் ஒருவேளை மிக முக்கியமான தலைப்பிற்கு இப்போது வந்திருக்கிறோம்: இரட்சிப்பு. ஒருவர் அநேக தலைப்புகளின் விசுவாச விஷயத்தில் தவறாக இருந்தாலும் இன்னமும் இரட்சிக்கப் பட்டிருக்கலாம், ஆனால் இரட்சிப்பைக் குறித்த பாடத்தை தவறான உபதேசத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கும் ஒருவரது ஆத்துமா இழப்பைக் காணும்.

பலதரப்பட்ட மார்க்கக் கூட்டத்தாரும் இரட்சிப்பைக் குறித்து பல முரண்பட்ட உபதேசத்தை போதிக்கின்றனர், ஆகிலும் திருமறை மிகத் தெளிவான போதனையை இந்தப் பாடத்தின் மீது கொண்டுள்ளது. *கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதால் விசுவாசத்தைக் கொண்டு கிருபையினாலே இரட்சிக்கப் படுகிறார்கள் என்று நாம் விசுவாசிக்கிறோம்.*

## இரட்சிப்பின் அவசியம்

ஒருவர் தான் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என போதிக்கப் படுவதற்குமுன், அவர் ஏன் தான் இரட்சிக்கப்பட வேண்டுமென புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். ''ஏன்'' இரட்சிக்கப்பட வேண்டும் - இரட்சிப்பின் அவசியம் - ஆகியவற்றைச் சுருக்கமாக ஒரே வார்த்தையில் சொன்னால்: "பாவத்தினால்"! ஜனங்கள் இழந்து போனவர்களாய் இருப்பதால், அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும், பாவம் செய்தமையால் அவர்கள் இழந்து போனவர்களாயிருக்கிறார்கள்! ரோமர் 3:23 சொல்லுகிறது "எல்லாரும் பாவஞ் செய்தவர்கள்'' (1 யோவான் 1:8, 10 ஆகியவற்றைக் காண்க), மேலும் ரோமர் 6:23 "பாவத்தின் சம்பளம் மரணம்" என அறிக்கையிடுகிறது.

மரண ஆக்கினையை அடையக் கூடிய அளவுக்கு ஜனங்கள் பாவத்தோடு பிறப்பதில்லை. தம்மிடத்தில் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் இயேசு அவர்கள் மனந்திரும்பி ''பிள்ளைகளைப் போல்'' ஆகி தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று சொன்னார் (மத்தேயு 18:3). நாம் எல்லாருமே இந்த உலகத்தில் ஆதாம் சிருஷ்டிக்கப் பட்டபோது பாவமில்லாமல் இருந்ததைப் போல் நாம் பாவமில்லாதவர்களாய்ப் பிறந்தோம். ஆயினும், நாம் கணக்கொப்புவிக்கும் பிராயத்தை அடையும் போது, ஆதாம் செய்ததுபோல, பலவகையிலும் பாவம் செய்யத் தெரிந்து கொள்ளுகிறோம் - அப்பொழுது நாம் பாவிகளாகிறோம். அந்த பாவத்தின் நிலைமையில், நாம் இழந்து போனவர்களாகிறோம். பாவிகளாகும் போது "அக்கிரமங்களினாலும்

பாவங்களினாலும்'' (நாம்) மரித்தவர்களாகிறோம் (எபேசியர் 2:1); நாம் "கிறிஸ்துவைச் சேராதவர்களும் ... நம்பிக்கையில்லாதவர்களும் இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமானோம்" (எபேசியர் 2:12).

## இரட்சிப்பின் வழி

பாவிகள் எப்படி இரட்சிக்கப் படுகிறார்கள்? இரட்சிப்பு என்பது தெய்வீகச் செயலும் மனிதர்களின் பதில் செயலும் ஒத்துழைப்பும் ஒன்றிணையும்போது கிடைக்கும் விளைவு.

### தெய்வீகச் செயல்

*தேவ கிருபை.* கிறிஸ்தவர்கள் கிருபையினாலே இரட்சிக்கப் படுகிறார்கள். கிருபை என்பது "தகுதியற்ற தயவு." கிருபையினால் இரட்சிக்கப் படுதல் என்பது தேவனுடைய தயவைப் பெற்றுக் கொள்ள நமக்குத் தகுதியில்லை, ஆகிலும் எப்படியோ அவர் நம்மை இரட்சித்துள்ளார் என்று பொருள். திருமறையினூடே, கிருபையின் அடிப்படையிலேயே தேவன் ஜனங்களை இரட்சிக்கிறார் எனக் காண்கிறோம்.

கிருபை எனும் கருத்து பழைய ஏற்பாட்டில் யாத்திராகமம் 34:6, 7அ, ஆகிய வசனப் பகுதிகளில் காணப்படுகிறது, அது "கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்; ஆயிரம் தலைமுறைகளுக்கு, இரக்கத்தைக் காக்கிறவர், அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர் ..." தேவனுடைய கிருபை பழைய ஏற்பாட்டில் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்களுக்கு தகுதியில்லாதிருந்த போதும் அவரின் அன்பைப் பெற்றார்கள் என்பதில் தேவனுடைய கிருபை தெளிவாகக் காட்டப்படுகிறது.

இன்று ஜனங்கள் கிருபையினாலே இரட்சிக்கப் படுகிறார்கள் எனத் திருமறை முழுவதும் போதிக்கிறது. தேவனுடைய கிருபையினால், அவர் நமது பாவங்களுக்காக மரிக்கும்படித் தமது குமாரனை அனுப்பினார் (யோவான் 3:16). அநேக வேத வசனங்கள் "கிருபை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தாவிட்டாலும் தேவனுடைய கிருபையைப் போதிக்கிறது. உதாரணமாக, ரோமர் 5:8 சொல்லுகிறது, ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்." கெட்ட குமாரனைக் குறித்த உவமையில், லூக்கா 15ல், தகப்பன் தன்னுடைய பாவம் செய்த குமாரனை வரவேற்ற விதம் தேவனுடைய கிருபையை படம் பிடித்துக் காட்டியது. இன்னும் கூடுதலாக, எண்ணற்ற வசனப்பகுதிகள் நாம் கிருபையினாலே இரட்சிக்கப் பட்டோம் என்று குறிப்பாகச் சொல்லுகிறது. எபேசியர் 2:8, 9ல் "கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள்" என்று சொல்லுகிறது. ரோமர் 3:24ல் "அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்'' என்று சொல்லுகிறது. தீத்து 3 "நாம் செய்த நீதியினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், அவருடைய இரக்கத்தினாலும், ... தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப் பட்டு நீத்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்திரராகத்தக்கதாக'' (வசனங்கள் 5-7) என்று வலியுறுத்துகிறது.

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்கள் தங்களுடைய சுய நீதிக் கிருயைகளினாலே தங்களை இரட்சித்துக் கொள்ளக் கூடும் எனும் கருத்தை ஒருபோதும் பெற்றுக் கொள்ளக் கூடாது. அதேபோல, கிறிஸ்தவர்கள் தகுதியுள்ளவர்களாய் இருந்தபடியினாலே தேவன் அவர்களை இரட்சித்துள்ளதாக ஒருபோதும் நினைக்கக் கூடாது! ஒரு மனுஷன் கூட தான் இரட்சிக்கப்படத் தகுதியுள்ளவனல்ல! எல்லோரும் "பாவத்தின் சம்பளத்துக்கே" தகுதியானவர்கள்: அது மரணம். இருப்பினும், தேவன், தமது இரக்கத்தினாலே, பாவிகளை இரட்சிக்கிறார்!

*கிறிஸ்துவின் இரத்தம்.* தேவனுடைய கிருபையின் விளைவாக, கிறிஸ்துவின் இரத்தம் செலுத்தப்பட்டதினால், இரட்சிப்பு உண்டாயிருக்கிறது என்று திருமறையும் போதிக்கிறது. "உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இயேசு கிறிஸ்து வந்தார் (யோவான் 1:29). அவர் தாமே குறிப்பிடுகையில் அவருடைய இரத்தம் "பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்பட்டது" என்று சொன்னார் (மத்தேயு 26:28). கிறிஸ்து "தமது இரத்தத்தினால் பாவங்களற நம்மைக் கழுவினார்" என்று யோவான் சொன்னார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). பரலோகத்தில் இருக்கப் போகிறவர்கள், "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 7:14). பவுல், "அவருடைய [கிறிஸ்துவின்] கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் உண்டாயிருக்கிறது" என்று எழுதினார் (எபேசியர் 1:7; மேலும் காண்க எபிரெயர் 9:12-14, 28; 10:10, 12, 14, 19, 20). கிறிஸ்து சிலுவையிலே, நமது அக்கிரமங்களையும் பாவங்களையும் சுமந்து கொண்டார் (2 கொரிந்தியர் 5:21). அவரது மரணத்தின் பலியில், நாம் இரட்சிக்கப் படக்கூடும். நாம் ஜீவித்திருக்கும்படியாக அவர் மரித்தார். கிறிஸ்து நம்மை இரட்சிக்கும்படி மரித்தபடியால், நாம் அவருக்குள் மட்டுமே இரட்சிப்பைப் பெறமுடியும் (நடபடிகள் 4:12; யோவான் 14:6).

**மனிதரின் பதில் செயல்**

தேவன் எவ்வளவுதான் அன்புகூர்ந்தாலும், தெய்வீக செயலால் மட்டும் இரட்சிக்கப்பட முடியாது.[1] இரட்சிக்கப்பட விரும்புகிறவர், ஒருவகையில், தன் இரட்சிப்பில் தேவனோடு ஒத்துழைக்க வேண்டும். இப்படித்தான் எப்பொழுதும் நடந்துள்ளது. தேவன் கிருபையாக செங்கடலை பிளந்தார், ஆனாலும் அவரது ஜனங்கள்தான் எகிப்தியரிடமிருந்து தப்பிப்பதற்காக அந்த பாதையின் வழியாக நடந்து போக வேண்டியதாயிருந்தது. தேவன் தமது கிருபையால், எரிகோ பட்டணத்தின் மீது வெற்றியைக் கொடுத்தார்; ஆனால் ஜனங்களே எரிகோவின் மதில்கள் விழுவதற்கு முன் அதைச் சுற்றிவர வேண்டியிருந்தது. தேவனுடைய கிருபையால், நாகமான் தனது குஷ்டத்திலிருந்து குணமடையப் பெற்றான்; ஆனால் அவன் குணமடைவதற்குமுன் யோர்தான் நதியில் மூழ்கி எழவேண்டியதிருந்தது. தேவனுடைய கிருபையில் பயனடைய வேண்டுமாயின் ஜனங்கள் எப்பொழுதும் தேவனோடு ஒத்துழைக்க வேண்டியிருந்தது.

இன்று, தேவன் கிருபையால், இரட்சிப்பை ஈவாக நமக்குக் கொடுக்கிறார்; ஆகிலும் ஜனங்கள் அந்த ஈவாகிய இரட்சிப்பை ஏற்று கொண்டால் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும். இந்த வகையில் - அதாவது, கிருபையினால் ஈவாகக்

கொடுக்கப்படும் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என - பரிசீலனை பண்ணி தங்களை இரட்சித்துக் கொள்ள வேண்டும் (காண்க நடபடிகள் 2:40; KJV; RSV).

பாவிகள், கிருபையால் இரட்சிக்கப்பட, என்ன செய்ய வேண்டும்? புதிய ஏற்பாடு தேவையான பதில்செயல்களை தெளிவாகப் பேசுகிறது.

*விசுவாசம்.* முதலாவதாக நாம் விசுவாசிக்க வேண்டும். எபேசியர் 2:8, 9 சொல்லுகிறது, " விசுவாசத்தினாலே ... இரட்சிக்கப் பட்டீர்கள்" விசுவாசத்தின் அவசியத்தைக் குறித்து அநேக வசனங்கள் புதிய ஏற்பாட்டில் போதிக்கிறது.[2] விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம் (எபிரெயர் 11:6).

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்கிற விசுவாசம் இரட்சிப்புக்கு அவசியமான ஒன்று.[3] ஆயினும் இரட்சிக்கிற விசுவாசம் கிறிஸ்துவின் தெய்வீகத்தை ஒப்புக் கொள்ளுதல் மட்டும் கொண்டதல்ல என்பதும் உண்மை. மாறாக, அது, உறுதியான நம்பிக்கையின் செயல்பாட்டையும், கீழ்ப்படியும் விசுவாசத்தையும் கொண்டது. "விசுவாசம் மட்டும்" - ஒரு மரித்த விசுவாசம், கிரியையில்லாத விசுவாசம் - இரட்சிக்காது (யாக்கோபு 2:24, 26); கிறிஸ்துவை அறிக்கையிட மறுதலிக்கிற விசுவாசமும் விருதாவானது (யோவான் 12:42, 43). இரட்சிக்கிற விசுவாசம் கிறிஸ்துவில் உறுதியான நம்பிக்கை கொண்டு ஒருவர் தன்னைக் கிறிஸ்துவுக்கு அற்பணிப்பது. இப்படிப்பட்ட விசுவாசமே கீழ்ப்படிதலுக்கு வழிநடத்துகிறது.

*கீழ்ப்படிதல்.* இரண்டாவதாக, பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட, ஜனங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். கிறிஸ்து, "குமாரனாயிருந்தும், பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்"; பிறகு அவர் "தமக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்புக்குக் காரணரானார்" (எபிரெயர் 5:8, 9). இயேசு தாமே, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்" என்றார் (யோவான் 14:15; காண்க ரோமர் 6:17, 18). நாம் செய்தவைகளுக்காக நியாயந்தீர்க்கப் படுவோம், வெறும் விசுவாசம் கொண்டிருந்ததற்காக அல்ல (2 கொரிந்தியர் 5:10).

சுவிசேஷத்துக்கு கீழ்ப்படிந்தவர்களுக்கு நித்திய இரட்சிப்பு (2 தெசலோனிக்கேயர் 1:8; 1 பேதுரு 4:17; ரோமர் 10:16யும் காண்க). "விசுவாசத்துக்குக் கீழ்ப்படிவது குறித்து பவுல் குறிப்பிட்டார்" (ரோமர் 1:5; 16:26). கீழ்ப்படிய வேண்டியதன் அவசியத்தைப் புதிய ஏற்பாடு போதிக்கிறது. இயேசு, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று சொன்னார்" (மத்தேயு 7:21; மேலும் காண்க மத்தேயு 7:22-27). வேறொரு சமயம், அவர், "என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லியும் நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமல் போகிறதென்ன?" என்று கேட்டார் (லூக்கா 6:46). "சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்கள் இழந்தவர்களாவார்கள்" என்று பவுல் அறிவித்தார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).

கீழ்ப்படியத் தேவையானதெல்லாம், இயேசுவை விசுவாசித்த பின், ஒருவர் பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் (நடபடிகள் 2:38; லூக்கா 13:3, 5; நடபடிகள் 17:30; 2 பேதுரு 3:9); கிறிஸ்துவில் தான் கொண்டுள்ள

விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும் (ரோமர் 10:9, 10; மத்தேயு 10:32); பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் (முழுக்குதல்) பெற வேண்டும் (நடபடிகள் 2:38). தன்னுடைய மனந்திரும்புதலினாலும், ஞானஸ்நானத்தினாலும், தனது நம்பிக்கையின் உறுதியை இரட்சகராக கிறிஸ்துவை ஏற்றதை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். ஞானஸ்நானம் பெறும்படி கொடுக்கப்பட்ட கட்டளைக்கு அவர் கீழ்ப்படியும் போது, இரட்சிக்கப்படுகிறார். இரட்சிப்புக்கு ஞானஸ்நானத்தின் அவசியத்தை கீழ்வரும் வசனப்பகுதி போன்ற இடங்களில் பேசுகிறது.

> *"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16).*
>
> *பேதுரு அவர்களை நோக்கி, ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (நடபடிகள் 2:38).*
>
> *" 'இப்பொழுது நீ தாமதிக்கிறது என்ன? எழுந்து ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு' " (நடபடிகள் 22:16).*
>
> *அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1 பேதுரு 3:21).*[4]

சிலர் இரட்சிக்கப்பட விசுவாசமும் மனந்திரும்புதலும் அவசியம் என்று ஏற்றுக் கொள்கின்றனர், ஆனாலும் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் அவசியம் என்பதை ஆட்சேபிக்கின்றனர். அவர்களுடைய ஆட்சேபனைகளும் - அந்த ஆட்சேபனைகளுக்கு நமது பதிலும் - வருமாறு:

ஆட்சேபனை 1. *'ஞானஸ்நானம் அவசியம் என்று போதிப்பவர்கள் சொல்லுவது யாதெனில் ஞானஸ்நானம் பெறுபவரின் பகுதியில் எவ்வித விசுவாசமுமில்லாமலேயே அதற்கு அப்பால் ஞானஸ்நானம் எனும் சமயச் சடங்கைச் செய்தால் கிருபையானது சபையிலிருந்து அளிக்கப்படும் என்கின்றனர்."* இல்லை, திருமறை அந்த அர்த்தத்தில் ஞானஸ்நானம் என்பது ஒரு சமயச் சடங்கு அல்ல எனக் காட்டுகிறது. சபை கிருபையை அளிப்பதுமில்லை, அது இரட்சிப்பதுமில்லை. மாறாக, கிறிஸ்துவில் இரட்சிக்கப்பட்டவர்களை தனக்குள் கொண்டிருப்பதே சபை. மேலும், இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே ஞானஸ்நானம் பிரயோஜனமுள்ளது. "ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், ... *தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே* அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோசெயர் 2:12; வலியுறுத்துதல் என்னுடையது).

ஆட்சேபனை 2. *"ஞானஸ்நானத்தின் போது தான் இரட்சிப்பு கிடைக்கிறது என்று சொல்லுகிறவர்கள் நாம் கிரியைகளினாலே இரட்சிக்கப்படுகிறோம்*

*கிருபையினாலே அல்ல என்கின்றனர்.”* இதற்கு மாறாக, ஞானஸ்நானம் என்பது எபேசியர் 2:8, 9ல் பேசப்படுகிற கிரியையை குறிப்பதல்ல; ஞானஸ்நானம் என்பது கிரியையின் தகுதிக்காக கொடுக்கப்படுவதுமில்லை. ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருப்பது என்பது தேவன் கொடுக்கும் கிருபையின் இரட்சிப்புக்கு நாம் தகுதியானவர்கள் என்று காட்டவோ அல்லது தகுதியடைய முயற்சிப்பதோ அர்த்தமல்ல. ஞானஸ்நானம் என்பது தேவன் முன் தீர்மானித்த திட்டத்தின் ஒருபகுதியாக கோரப்படும் ஒரு தேவை. நாம் தேவனுடைய கிருபையின் ஈவை எப்படி ஏற்றுக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தது.

ஆட்சேபனை 3. *“ஞானஸ்நானத்தின் போது நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்று சொல்லுவது விசுவாசத்தினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதை மறுதலிப்பதாகும்.”* விசுவாசத்தினால் கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப் படுகிறார்கள் என்று திருமறை போதிக்கிறது. ஞானஸ்நானம் செயலூக்கம் கொடுக்க, உண்மையில் விசுவாசம் அவசியம். “விசுவாசத்தினால் இரட்சிப்பு,” என்பதற்கும் அல்லது “ஞானஸ்நானத்தினால் இரட்சிப்பு,” என்பதற்குமிடையே ஒன்றை தெரிவு செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் நாம் விசுவாசத்தினாலும் ஞானஸ்நானத்தினாலும் இரட்சிக்கப்படுகிறோம். நம்முடைய விசுவாசம் ஞானஸ்நானத்துக்கு வழி நடத்திச் செல்லும்போது அதினால் “இரட்சிப்படைகிறோம்” (மாற்கு 16:16).

ஆட்சேபனை 4. *“ஞானஸ்நானம் என்பது இரட்சிக்கப்படுவதற்காக அல்ல, ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின் அது நிகழ்த்தப்படுகிறது. அது சபையில் ஒரு அங்கமாவதற்கும் கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்குக் கீழ்ப்படியவுமே அது தேவையானது.”* திருமறை போதிக்கும் ஞானஸ்நானம் பாவமன்னிப்பிற்காக அல்லது பாவமன்னிப்படைய (*இய்ஸ்*, ‘‘பெற்றுக் கொள்ளும்படி’’) “பாவமன்னிப்பு பெற்று கொண்டிருப்பதால்” அல்ல (நடபடிகள் 2:38).

இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் தேவை என்கிற போதனைக்கு யாரும் ஆட்சேபனை தெரிவிப்பது எவ்வளவு ஆச்சரியம்! இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் தேவை என்பதை இயேசுவே பேரிட்டார் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:16; யோவான் 3:5). அப்போஸ்தலர்கள் அதேபோல பாவமன்னிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் என பிரசங்கித்தார்கள் (நடபடிகள் 2:38). ஞானஸ்நானம் பெற்றவர்கள் பிரதிபலனாக “புதிதான ஜீவனுள்ளவர்களாய்” இருக்கிறார்கள் (ரோமர் 6:3, 4).

## இரட்சிப்பின் விளைவுகள்

*சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படும்போது நடப்பது என்ன?*

- நாம் இரட்சிக்கப்படுகிறோம் (எபேசியர் 2:8, 9; மாற்கு 16:16; 1 பேதுரு 3:21).
- நாம் நீதிமானாக்கப்படுகிறோம் (ரோமர் 3:24; 5:1; தீத்து 3:7) இனியும் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுவதில்லை (ரோமர் 8:1).
- நாம் மறுபடியும் பிறந்து புதிதான ஜீவனைப் பெறுகிறோம், புதிய சிருஷ்டியாகவும் மாறுகிறோம் (யோவான் 3:3, 5; ரோமர் 6:3, 4; 2 கொரிந்தியர் 5:17).

- *நாம் "கிறிஸ்துவுக்குள்ளாகிறோம்" (கலாத்தியர் 3:26, 27), அவருக்குள் சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இருக்கிறது (எபேசியர் 1:3).*
- *நாம் மீட்கப்படுகிறோம் (எபேசியர் 1:7; ரோமர் 3:24).*
- *நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (கலாத்தியர் 3:26).*
- *கர்த்தருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறோம், அது கிறிஸ்துவின் சரீரம் (நடபடிகள் 2:41, 47; 1 கொரிந்தியர் 12:13).*
- *நமது பாவங்கள் மன்னிக்கப்படுகிறது (நடபடிகள் 2:38), கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்படுகிறது (நடபடிகள் 22:16; தீத்து 3:5; வெளிப்படுத்தின விசேஷம் 7:14).*

## முடிவுரை

*சுவிசேஷ சத்தியங்கள் நமது வாழ்வில் என்ன விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்? முதலாவதாக, நாம் அவைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். பாவத்திலிருக்கிற யாராக இருந்தாலும், நம்பிக்கையற்றவர்களாய் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் கிறிஸ்துவிடம் திரும்பி தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். இரண்டாவதாக, இந்த சத்தியங்களை நாம் போதிக்க வேண்டும். நாம் கிருபையினாலும் விசுவாசத்தினாலும் இரட்சிக்கப் பட்டோம் என்பதையும் மற்றவர்களும் இரட்சிக்கப்பட சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்படி நாம் போதிக்க மறக்கவோ மறுக்கவோ கூடாது.*

---

*குறிப்புகள்*

*[1]ஜனங்கள் இரட்சிக்கப்பட ஏதாகிலும் செய்ய வேண்டும் என்பதற்கு இரண்டு உண்மைகள் காணுகின்றன: (1) எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (2 பேதுரு 3:9) மற்றும் (2) அநேகர் இழந்துபோனவர்களாயிருக்கிறார்கள் என்கிற உண்மை (மத்தேயு 7:13, 14). இரட்சிப்பு முழுக்க முழுக்க தேவனை மட்டும் சார்ந்திருப்பின், எல்லாருமே இரட்சிக்கப்படுவார்கள். அவரே வைத்துள்ள திட்டத்தின்படி, ஒரு தனிநபர் இரட்சிப்படைவதோ இழந்துபோவதோ முற்றிலும் தேவனைச் சார்ந்தது அல்ல; அந்த நபர் தன்னுடைய இரட்சிப்பினிமித்தம் "தேவனோடு ஒத்துழைக்க" விருப்பமுள்ளவராய் இருப்பதைப் பொறுத்தே அமையும் - தேவன் தமது கிருபையினால் வைத்துள்ள இரட்சிப்பின் ஈவை ஏற்றுக் கொள்வது அவரைச் சேர்ந்தது. [2]காண்க யோவான் 1:12; 3:16; 5:24; 8:24; 20:30, 31; நடபடிகள் 16:31; ரோமர் 10:9, 10; 15:1. [3]அப்படிப்பட்ட "விசுவாசம், கேள்வியினால் வரும்; கேள்வி கிறிஸ்துவினுடைய வசனத்தினால் வரும்" (ரோமர் 10:17). இன்னொரு வார்த்தையில் சொன்னால், ஒருவர் இரட்சிக்கப்பட, சுவிசேஷம் முதலாவதாக பிரசங்கிக்கப் பட வேண்டும். தேவன் தமது திட்டத்தில் "ஒரு பிரசங்கியாரையும் உட்படுத்தியிருக்கிறார்" (ரோமர் 10:14; மேலும் காண்க 1:16; 1 கொரிந்தியர் 1:18-25).*